# அரியலூர் நகராட்சி

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>MCR No.</th><th>Serial Number and subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td colspan="4">அரியலூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் நிகழும் துர்முகி வருடம் 16.07.2021ம் தேதி வெள்ளிகிழமை காலை 11.00 மணிக்கு தனிஅலுவலர் அவகளின் தலைமையில் நடைபெறும். அது தொடர்பான கீழ்கண்ட பொருள்கள் பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.</td></tr>
<tr><td>16.07.2021</td><td>95</td><td><u>பொருள் எண். 01</u><br>மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்களின் ந.க.ஈ3/4585/2020, நாள்.22.03.2021ன்கடிதத்தின்படி, தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 முன்னிட்டு வாக்களிக்க வரும் அனைத்து மாற்றுத்திறனாளி வாக்காளர்களும் எவ்வித சிரமங்களும் இன்றி வாக்களிக்க ஏதுவாக அனைத்து வாக்குச்சாவடி மையங்களில் மூன்று சக்கர நாற்காலிகள் 20 எண்ணிக்கை கொள்முதல் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.1,29,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக்குறிப்பு</u><br>தேர்தல் பணி என்பதால் மேற்காணும் நிருவனத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.1,29,000/- வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>16.07.2021</td><td>96</td><td><u>பொருள் எண். 02</u><br>அரியலூர் நகராட்சிப்பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், திடக்கழிவு மேலாண்மை மற்றும் கொரோனா விழிப்புணர்வு போன்றவற்றை பொதுமக்கள் அறியும் வண்ணம் பேருந்து நிலையம் மற்றும் நகரின் முக்கிய பகுதிகளில் விழிப்புணர்வு நாடகங்கள் நடத்த உத்தேச செலவினம் ரூ.1,00,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதால் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>16.07.2021</td><td>97</td><td><u>பொருள் எண். 03</u><br>அரியலூர் நகராட்சிப்பகுதிகளில் பொதுமக்கள் அறியும் வண்ணம் பேருந்து நிலையம் மற்றும் நகரின் முக்கிய பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், திடக்கழிவு மேலாண்மை மற்றும் கொரோனா விழிப்புணர்வு போன்ற நாடகங்கள் நடத்த 08.02.2021 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>தென்னகத்து கலைத்தென்றல், கிராமிய கலைக்குழு, தஞ்சாவூர்</th><th>புதுகை சங்கமம், புதுக்கோட்டை</th><th>நியூ இந்தியன் கலைக்குழு, தஞ்சாவூர்</th></tr>
<tr><td>1.</td><td>அரியலூர் நகராட்சிப்பகுதிகளில் பொதுமக்கள் அறியும் வண்ணம் பேருந்து நிலையம் மற்றும் நகரின் முக்கிய பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், திடக்கழிவு மேலாண்மை மற்றும் கொரோனா விழிப்புணர்வு நாடகங்கள் நடத்துதல்</td><td>ரூ.8,000/- (நிகழ்ச்சி ஒன்றிற்கு)</td><td>ரூ.8,500/- (நிகழ்ச்சி ஒன்றிற்கு)</td><td>ரூ.9,500/- (நிகழ்ச்சி ஒன்றிற்கு)</td></tr>
</table></td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு</u><br>1. குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.A.சந்தானகிருஷ்ணன், தென்னகத்து கலைத்தென்றல், கிராமிய கலைக்குழு, தஞ்சாவூர் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>2. பொது சுகாதாரப்பணி என்பதாலும், பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம். | |
| 16.07.2021 | 98 | <u>பொருள் எண். 04</u><br>மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்களின் ந.க.ஈ3/4959/2020, நாள்.19.03.2021ன்கடிதத்தின்படி, தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 முன்னிட்டு வாக்குச்சாவடிகளில் தேவையான அடிப்படை வசதிகளை (குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, Furniture, மின்வசதி மற்றும் பிற தேவைப்படும் வசதி) நகராட்சி விதி15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலக்குறிப்பு</u><br>தேர்தல் பணி என்பதாலும், தற்போது கோடைக்காலம் என்பதாலும் பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் பணியினை போர்கால அடிப்படையில் நகராட்சிகள் விதி 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.1,94,000/-னை ஸ்ரீவெங்கடேஸ்வரா சப்ளையர்ஸ், அரியலூர் என்ற நிருவனத்திற்கு வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 99 | <u>பொருள் எண். 05</u><br>மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்களின் ந.க.எண்.34/2019/உ.தே, நாள்.17.03.2021ன்கடிதத்தின்படி, உள்ளாட்சி தேர்தல் படிவங்கள், தேர்தல் கையேடுகள், உறைகள் மற்றும் தேர்தல் பொருட்கள் முறையாக பராமரிக்கவும், அடுக்கி வைப்பதற்கும் தேவையான Furniture மற்றும் பிற தேவைப்படும் வசதிகள் நகராட்சி விதி15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலக்குறிப்பு</u><br>தேர்தல் பணி என்பதாலும், உள்ளாட்சி தேர்தல் பொருட்கள முறையாக பராமரிக்கவும் போர்கால அடிப்படையில் நகராட்சிகள் விதி 15ன் கீழ் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.4,47,220/-னை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான அரியலூர் ஆதிதிராவிடர் தச்சு கொல்லு தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம்., இண்ட். எண்.343., அரியலூர் என்ற நிருவனத்திற்கு வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 100 | <u>பொருள் எண். 06</u><br>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் உள்ள கடைகள் மற்றும் தினசரி மார்க்கெட் கடைகளின் குத்தகைக் காலம் 31.03.2021ஆம் ஆண்டுடன் முடிவடைகின்றது. அதனை 2021–22ஆம் ஆண்டு முதல் 2023–24 முடிய மேலும் மூன்று ஆண்டுகளுக்கு, ஏற்கனவே அனுபவித்து வரும் குத்தகைதாரர்களுக்கு கால நீட்டிப்பு செய்து புதுப்பித்துக் கொடுப்பதற்கு ஏதுவாக, நடைமுறைகளை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>1. பேருந்துநிலையத்தில் உள்ள கடைகள் 1 முதல் 52 கடைகள்.<br>2. பேருந்துநிலைய கீழ்புற கடைகள் 1 முதல் 5 கடைகள்<br>3. பேருந்துநிலைய மேல்புற கடைகள் 1 முதல் 5 கடைகள்<br>4. பேருந்துநிலைய பழைய கடைகள் 1 முதல் 5 கடைகள்<br>5. பேருந்து நிலைய மண்டி கடைகள் 1 முதல் 10 கடைகள்<br>6. தினசரி மார்க்கெட் கடைகள் 1 முதல் 46 கடைகள்<br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>**<br>அரசாணை நிலை எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள். 03.07.2007–ல் தெரிவித்துள்ள வழிகாட்டி நெறிமுறைகளுக்கிணங்க, நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் உள்ள கடைகள் மற்றும் தினசரி மார்க்கெட் கடைகளின் குத்தகை உரிமையை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்கனவே உள்ள மாத வாடகை தொகையில் 15 சதவீதம் உயர்த்தி பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு மீண்டும் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை உரிமத்தினை புதுப்பித்துக் கொடுப்பதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>1. நகராட்சிக் கடைகள், ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்குக் குத்தகைக்கு விடப்படலாம். மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு முடிவடைவதன் பேரில், அக்குத்தகை (Automatically) தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படும். இவ்வாறாக ஒன்பது ஆண்டுகள் வரையில் புதுப்பிக்கப்படும். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குத்தகைத் தொகை 15 (பதினைந்து) சதவிதம் உயர்த்தப்படும். (இந்நிபந்தனை தற்போது குத்தகையை அனுபவித்து வரும் குத்தகைதாரர்களுக்கு பொருந்தும்)<br>2. அவ்வாறு வழங்கப்பட்ட புதிய இனத்திற்கு, அடுத்த மூன்றாண்டுகளுக்கான குத்தகை தொகையினை (மாதாந்திர வாடகை) முந்தைய குத்தகை தொகைக்கு மேல் 15 விழுக்காட்டிற்கு குறையாமல் அந்தப் பகுதிகளில் நிலவி வரும் சந்தை வாடகை மதிப்பிற்கேற்ப உயர்வு செய்யப்பட வேண்டும்.<br>3. அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான மேற்கண்ட குத்தகை இனங்களை ஏற்கனவே கடை நடத்தி வருபவர்களுக்கு, அரசாணைக்கிணஙக, மேலும் மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்துக் கால நீட்டிப்பு செய்து கொடுக்க அனுமதிக்கலாம். | |
| 16.07.2021 | 101 | <u>பொருள் எண். 07</u><br>**இந்நகராட்சி நகரமைப்பு பிரிவு சார்ந்த வழக்கு எண்கள். 24/2020, 253/2013 மற்றும் டாக்டர் சரவணன் என்பவர் கட்டிட உரிமம் வழங்கப்பட்டதை குறித்த விபரம் சமர்பிக்கப்பட்டது ஆகிவற்றிற்காக அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.P.இராமகோவிந்தராஜன் அவர்களுக்கு வழக்காடு கட்டணம் ரூ.20,000/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>**தனி அலுவலர் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்** | **அனுமதிக்கப் பட்டது** |
| 16.07.2021 | 102 | <u>பொருள் எண். 08</u><br>**அரசாணை நிலை எண்.88 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.24.02.2021ன் படி கொரோனா வைரஸ் தொற்று பரவி வருவதை தடுப்பதற்கு அனைத்து துறைகள் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை பணிகளில் முதன்மையான சமூக விலகளை கடைப்பிடித்திட ஏதுவாக பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் தெருக்களில் தடுப்புகள் அமைத்திடவும், மேலும், கொரோனா நோய் தொற்று ஏற்பட்ட நபர் உள்ள பகுதியினை (Quarantine Area) தடுப்புகள் (Barricading) அமைத்து தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அமைத்திடும் பணிகளான தற்காலிக தடுப்புகள் பணிகளான தற்காலிக தடுப்புகள் 1920 ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் விதி 15 மற்றும் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி விதி16(A)ம் படியும் மேற்கொள்ளப்பட்டு அதற்கான பட்டியல் தொகையினை ரூ.3,36,000/-னை திரு.A.சுதாகர் வி.கைகாட்டி என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.**<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>**கொரோனா நோய் முன்னெச்சரிக்கை பணி என்பதாலும் பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் நகராட்சி விதி15ன் கீழ் பணிகளின் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.3,36,000/- வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.** | **அனுமதிக்கப் பட்டது** |
| 16.07.2021 | 103 | <u>பொருள் எண். 09</u><br>**அரசாணை நிலை எண்.88 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.24.02.2021ன் படி அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று பாதிக்கப்பட்டுள்ள நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்கள், பேருந்து நிலையத்தில் மூன்று இடங்களிலும் மற்றும் அம்மா மினி கிளினிக் தண்ணீர் வசதி இல்லாததால், தினசரி லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் நகராட்சி விதி 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதற்கான மார்ச் 2021 மற்றும் ஏப்ரல் 2021 மாதத்திற்கு பட்டியல் தொகை ரூ.1,80,000/-னை திரு.A.சுதாகர், வி.கைகாட்டி என்பவருக்கு** | **அனுமதிக்கப் பட்டது** |

<table>
<tr><td></td><td></td><td>வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை பணி என்பதாலும், பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் நகராட்சி விதி15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.</td><td></td></tr>
<tr><td>16.07.2021</td><td>104</td><td><u>பொருள் எண். 10</u><br>மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்களின் அறிவுரையின்படி, அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக கொரோனா தடுப்பூசி விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் விளம்பர பதாகைகள் அமைக்க பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>Vinayaga Flex Printing. Ariyalur</th><th>Pathma Offset Printing, Ariyalur</th><th>Sabari Advertisement, Ariyalur</th></tr>
<tr><td>1</td><td>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக கொரோனா தடுப்பூசி விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் விளம்பர பதாகைகள் விளம்பர பதாகைகள் அமைத்தல்</td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td>அளவு 10x8</td><td>1600</td><td>1750</td><td>1500</td></tr>
<tr><td></td><td>அளவு 15x 10</td><td>2450</td><td>2600</td><td>2250</td></tr>
<tr><td></td><td>அளவு 8x3</td><td>630</td><td>680</td><td>550</td></tr>
<tr><td></td><td>அளவு 12x8</td><td>1950</td><td>2100</td><td>1800</td></tr>
<tr><td></td><td>அளவு 10x5</td><td>850</td><td>900</td><td>800</td></tr>
<tr><td></td><td>அளவு 4x3</td><td>400</td><td>400</td><td>350</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>1. குறைவான விலைப்புள்ளி வழங்கிய Sabari Advertisement, Ariyalur என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.<br>2. பொது சுகாதாரப்பணி என்பதாலும், பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>16.07.2021</td><td>105</td><td><u>பொருள் எண். 11</u><br>மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்கள் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளை ஆய்வு செய்த போது வார்டு எண்.01 அம்பேத்கார் தெருவில் உள்ள அன்னை தெரசா துவக்கப்பள்ளியின் சுற்றுச்சுவர் உள்ள நுழைவு வாயில் மிகவும் குறுகியதாக உள்ளதால், குழந்தைகள் மற்றும் தேர்தல் வாக்கு சாவடிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்கள் சென்று வருவதில் சிரமம் ஏற்படும் என்பதால், பள்ளியின் நுழைவு வாயிலை வாகனங்கள் செல்லும் அளவுக்கு மாற்றி அமைக்க வழங்கப்பட்ட அறிவுரையின்படி, மேற்படி பணிகளை நகராட்சி விதி15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>தேர்தல் பணி என்பதாலும், பள்ளி குழந்தைகள் நலன் சார்ந்த பணி என்பதாலும் பணியினை போர்கால அடிப்படையில் நகராட்சிகள் விதி 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.3,30,000/-னை திரு.A.சுதாகர் வி.கைகாட்டி என்பவருக்கு வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>16.07.2021</td><td>106</td><td><u>பொருள் எண். 12</u><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 பெரிய அரண்மனைத்தெரு மற்றும் வார்டு எண்.15 மேல அக்ரஹாரம் தெருவில் உள்ள சிறுபாலம் உடைந்து</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் மிகவும் சிரமமாக இருந்ததால், அதனை உடன் சரி செய்யவும், புதிய பாலம் அமைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>பொது சுகாதாரம் மற்றும் பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>16.07.2021</td>
<td>107</td>
<td><u>பொருள் எண். 13</u><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 பெரிய அரண்மனைத்தெரு மற்றும் வார்டு எண்.15 மேல அக்ரஹாரம் தெருவில் உள்ள சிறுபாலம் உடைந்து பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் மிகவும் சிரமமாக இருந்ததால், அதனை உடன் சரி செய்யவும், புதிய பாலம் அமைக்கவும் 23.06.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்தாரர்கள் விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.S.ராஜா, அரியலூர்</td><td>0.86% மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.A.சுதாகர், வி.கைகாட்டி</td><td>3.07% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.86% குறைவாக கொடுத்த திரு.S.ராஜா, அரியலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br>2. பொது சுகாதாரம் மற்றும் பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>16.07.2021</td>
<td>108</td>
<td><u>பொருள் எண். 14</u><br>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் விநியோகிக்கும் செய்யும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து அரியலூர் வரை உள்ள பிரதான குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரி செய்ய 2021-22ம் ஆண்டிற்கான பராமரிப்பிற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8.70 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>குடிநீர் பணி என்பதாலும், பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>16.07.2021</td>
<td>109</td>
<td><u>பொருள் எண். 15</u><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகிக்கும் பகிர்மான குழாய்கள், திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து அரியலூர் வரை உள்ள பிரதான குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை ஓராண்டிற்கு சரி செய்யும் பணிகள் மேற்கொள்ள 29.06.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்தாரர்கள் விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.A.சுதாகர், வி.கைகாட்டி</td><td>0.91% மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.R.சுதாகர், பெரம்பலூர்</td><td>4.43% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.91% குறைவாக கொடுத்த திரு.A.சுதாகர், வி.கைகாட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br>2. குடிநீர் விநியோகப்பணி என்பதாலும் பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 16.07.2021 | 110 | <u>பொருள் எண். 16</u><br>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகன மேடை கட்டடம் பெரம்பலூர் சாலையில் ஊரின் ஒதுக்கு புறமாக உள்ளது. அரசு மாவட்ட தலைமை மருந்துவமனையில் தினசரி கொரோனா தொற்றினால் சராசரியாக 10 எண்ணிக்கையிலான மரணங்கள் நிகழ்வதால், நவீன எரிவாயு தகன மேடை தொடர் பயன்பாட்டில் உள்ளது. மேலும், ஊருக்கு ஒதுக்கு புறமாக உள்ளதால் இரவு நேரங்களில் சமுக விரோதிகள் தகாத செயலில் ஈடுபடுவதாக தெரியவருகிறது. எனவே, மேற்கண்ட கட்டடத்தினை கண்காணிக்க ஏதுவாக கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணிகள் 1920 ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் விதி 15 மற்றும் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி விதி16(A)ம் படியும் மேற்கொள்ளப்பட்டு அதற்கான பட்டியல் தொகையினை ரூ.80,900/-னை KPS Technologies உரிமையாளர் திரு.M.பிரபாகரன் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலக குறிப்பு</u><br>கொரோனா நோய் முன்னெச்சரிக்கை பணி என்பதாலும் பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் நகராட்சி விதி15ன் கீழ் பணிகளின் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.80,900/- வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 111 | <u>பொருள் எண். 17</u><br>அரியலூர் நகராட்சி புதிய அலுவலக கட்டடம் மற்றும் நவீன எரிவாயு தகன மேடை கட்டடம் ஆகிவற்றினை மாண்புமிகு.தமிழக முதல்வர் அவர்கள் திறப்பதற்கு வருகை புரிவதை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்கள் ஆய்வுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின்படி நகரின் முக்கிய பகுதிகளில் பொது மக்கள் கூடும் இடங்களில் தற்காலிக குடிநீர் வசதி மற்றும் தற்காலிக கழிப்பிடங்கள் அமைக்கும் பணிகள் 1920 ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் விதி 15 மற்றும் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி விதி16(A)ம் படியும் மேற்கொள்ளப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.3,00,000/-னை திரு.P.இராமலிங்கம், அரியலூர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலக குறிப்பு</u><br>பொது சுகாதார பணி என்பதாலும், அரசு நிகழ்ச்சி என்பதாலும் நகராட்சி விதி15ன் கீழ் பணிகளின் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.3,00,000/- வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 112 | <u>பொருள் எண். 18</u><br>COVID - 19 இரண்டவது அலையின் காரணமாக கொரோனா வைரஸ் தொற்று பாதிக்கப்பட்டுள்ள நபர்களை தங்க வைத்து மருத்துவ சிகிச்சை அளிக்க ஏதுவாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின்படி, நகராட்சி விதி 15ன் கீழ் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கொரோனா வைரஸ் தொற்று பாதிக்கப்பட்டுள்ள நபர்களுக்காக குளியலறையினை அலுமினியம் Partition கொண்டு அமைக்கவும், புதிய அலுவலக கட்டடத்தில் வசூல் செய்யும் அறையினை கொரோனா நோய் கட்டுப்பாட்டு அறையாக Aluminium Partition கொண்டு அமைக்க 1920 ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் விதி 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகையினை ரூ.8,00,000/-னை திரு.A.சுதாகர், அரியலூர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலக குறிப்பு</u><br>கொரோனா நோய் முன்னெச்சரிக்கை பணி என்பதாலும் பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் நகராட்சி விதி15ன் கீழ் பணிகளின் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.8,00,000/- வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம். | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 16.07.2021 | 113 | <u>பொருள் எண். 19</u><br>COVID - 19 இரண்டவது அலையின் காரணமாக கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வருவதால் பொது மக்கள் நலன் கருதி அனைத்து பகுதியிலும் கபசூரக்குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக கபசூரக்குடிநீர் சூரணம் கொள்முதல் செய்ய 1920 ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் விதி 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகையினை ரூ.2,83,500/-னை M/s.Herbosiddh Lifecare Pvt.ltd (GMP Company No.1414), Dindigul-624005 என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலக குறிப்பு</u><br>கொரோனா நோய் முன்னெச்சரிக்கை பணி என்பதாலும் பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் நகராட்சி விதி15ன் கீழ் பணிகளின் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.2,83,500/- வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 114 | <u>பொருள் எண். 20</u><br>அரசாணை நிலை எண்.88 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.24.02.2021ன் படி கொரோனா வைரஸ் தொற்று பரவி வருவதை தடுப்பதற்கு அனைத்து துறைகள் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை பணிகளில் முதன்மையான சமூக விலகளை கடைப்பிடித்திட ஏதுவாக பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் தெருக்களில் தடுப்புகள் அமைத்திடவும், மேலும், கொரோனா நோய் தொற்று ஏற்பட்ட நபர் உள்ள பகுதியினை (Quarantine Area) தடுப்புகள் (Barricading) அமைத்து தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அமைத்திடும் பணிகளான தற்காலிக தடுப்புகள் பணிகளான தற்காலிக தடுப்புகள் 1920 ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் விதி 15 மற்றும் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி விதி16(A)ம் படியும் மேற்கொள்ளப்பட்டு அதற்கான பட்டியல் தொகையினை ரூ.2,52,000/-னை திரு.A.சுதாகர், அரியலூர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலக குறிப்பு</u><br>கொரோனா நோய் முன்னெச்சரிக்கை பணி என்பதாலும் பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் நகராட்சி விதி15ன் கீழ் பணிகளின் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.2,52,000/- வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 115 | <u>பொருள் எண். 21</u><br>COVID - 19 இரண்டவது அலையின் காரணமாக கொரோனா வைரஸ் தொற்று பாதிக்கப்பட்டுள்ள நபர்களை தங்க வைத்து மருத்துவ சிகிச்சை அளிக்க ஏதுவாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரையின்படி, நகராட்சி விதி 15ன் கீழ் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கொரோனா வைரஸ் தொற்று பாதிக்கப்பட்டுள்ள நபர்கள் வெளியே வராத வண்ணம் GI தகடுகளினால் தடுப்பு அமைக்குமாறும், அரசு மேல்நிலைப்பள்ளியில் தற்காலிக தினசரி காய்கறி கடைகள் அமைத்து பொதுமக்கள் சமூக இடைவெளி பின்பற்ற ஏதுவாக சவுக்கு கட்டையினால் ஆன தடுப்புகள் அமைக்க 1920 ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் விதி 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகையினை ரூ.3,70,000/-னை திரு.A.சுதாகர், அரியலூர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலக குறிப்பு</u><br>கொரோனா நோய் முன்னெச்சரிக்கை பணி என்பதாலும் பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் நகராட்சி விதி15ன் கீழ் பணிகளின் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.3,70,000/- வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 116 | <u>பொருள் எண். 22</u><br>அரியலூர் நகராட்சி பழைய அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டரங்கின் அறையில் உள்ள டேபிள் மற்றும் நகர்மன்ற தலைவர் அமரும் மேஜையினை பழது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு புதிய அலுவலக | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | நகராட்சி நகர்மன்ற கூட்டரங்கில் மாற்றம் செய்யும் பணிகளை நகராட்சி விதி15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலக்குறிப்பு</u><br>அலுவலகப்பணி என்பதால் நகராட்சிகள் விதி 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.2,60,000/-னை திரு.A.சுதாகர், வி.கைகாட்டி என்பவருக்கு வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | |
| 16.07.2021 | 117 | <u>பொருள் எண். 23</u><br>அரசாணை நிலை எண்.88 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.24.02.2021ன் படி கொரோனா வைரஸ் தொற்று பரவி வருவதை தடுப்பதற்கு அனைத்து துறைகள் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை பணிகளில் முதன்மையான சமூக விலகளை கடைப்பிடித்திட ஏதுவாக பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் தெருக்களில் தடுப்புகள் அமைத்திடவும், மேலும், கொரோனா நோய் தொற்று ஏற்பட்ட நபர் உள்ள பகுதியினை (Quarantine Area) தடுப்புகள் (Barricading) அமைத்து தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அமைத்திடும் பணிகளான தற்காலிக தடுப்புகள் பணிகளான தற்காலிக தடுப்புகள் 1920 ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் விதி 15 மற்றும் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி விதி16(A)ம் படியும் மேற்கொள்ளப்பட்டு அதற்கான பட்டியல் தொகையினை ரூ.3,36,000/-னை திரு.A.சுதாகர், அரியலூர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலக குறிப்பு</u><br>கொரோனா நோய் முன்னெச்சரிக்கை பணி என்பதாலும் பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் நகராட்சி விதி15ன் கீழ் பணிகளின் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.3,36,000/- வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 118 | <u>பொருள் எண். 24</u><br>மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்கள் 10.05.2021 அன்று மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகத்தின் கொரோனா சிறப்பு வார்டுகளை ஆய்வு செய்த போது, மருத்துவமனை வளாகத்தின் வெளியே கழிவு நீர் வாய்க்கால்களில் அடைப்பு ஏற்பட்டு பொது சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலையில் உள்ளதால், அதனை சரி செய்ய வழங்கப்பட்ட அறிவுரையின்படி, அரசு தலைமை மருத்துவமனை நுழைவு வாயில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை அகற்றி 450mm விட்டம் கொண்ட RCC பைப் கொண்டு சிறுபாலம் அமைத்திட 1920 ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் விதி 15 மற்றும் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி விதி16(A)ம் படியும் மேற்கொள்ளப்பட்டு அதற்கான பட்டியல் தொகையினை ரூ.1,00,000/-னை திரு.P.இராமலிங்கம், அரியலூர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலக குறிப்பு</u><br>பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் மற்றும் பொது சுகாதாரப்பணி என்பதாலும் நகராட்சி விதி15ன் கீழ் பணிகளின் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.1,00,000/- வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம் | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 119 | <u>பொருள் எண். 25</u><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட அம்பேத்கார் தெரு, கீழத்தெரு, பெரிய தெரு, இருசுக்குட்டை, கல்லகுடி தெரு, வ.உ.சி.தெரு, இராஜாஜி நகர் 3வது தெரு, இராஜாஜி நகர் 4வது தெரு, காமராஜ் நகர் 3வது குறுக்கு தெரு, சிங்காரத் தெரு, ஸ்டேடியம் முதல் சத்யா நகர் வரை, மாரியம்மன் கோவில் சாலை மற்றும் இரயில்வே ஸ்டேசன் சாலையில் உள்ள முற்சொடிகள் மற்றும் பேருந்து நிலைய ஆக்கிரமிப்புகளை 1920 ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் விதி 15 மற்றும் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி விதி16(A)ம் படியும் JCB வாகனம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான பட்டியல் தொகையினை ரூ.40,000/-னை திரு.S.மனோகரன், ஸ்ரீமதுரைவீர சுவாமி லாரி சர்வீஸ், பெரம்பலூர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலக குறிப்பு</u> | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்காணும் பணியினை பொது நிதியில் மேற்கொள்ளபொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் மற்றும் பொது சுகாதாரப்பணி என்பதாலும் நகராட்சி விதி15ன் கீழ் பணிகளின் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.40,000/- வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம். | |
| 16.07.2021 | 120 | <u>பொருள் எண். 26</u><br>அரியலூர் நகராட்சி பொறியியல் பிரிவு வார்டு எண்.03 பகுதிக்குட்பட்ட எத்துராஜ் நகரில் உள்ள கழிவறையில் கதவுகள், தண்ணீர் வசதி மற்றும் மின் வசதிகள் இல்லாமல் மிகவும் பழுதடைந்துள்ளதால், மேற்கண்ட கழிவறையை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2,00,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மேற்காணும் பணியினை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>2. மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 121 | <u>பொருள் எண். 27</u><br>அரியலூர் நகராட்சி பொறியியல் பிரிவு வார்டு எண்.03 இரயில்வே ஸ்டேசன் சாலையின் ஓரப்பகுதியில் உள்ள சிறு விசைப்பம்பு (MPP) அமைக்கப்பட்டுள்ளது. தற்போது ஆழ்குழாய் கிணற்றில் உள்ள நிலத்தடி நீர் மட்டம் குறைவாக உள்ளதால் பொது மக்களுக்கு போதுமான குடிநீர் வழங்க இயலவில்லை. எனவே, மேற்கண்ட சிறுவிசை பம்பில் உள்ள ஆழ்குழாய் கிணற்றை புதியதாக அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5,20,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மேற்காணும் பணியினை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>2. மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 122 | <u>பொருள் எண். 28</u><br>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வரும் பிரதான குடிநீர் குழாயின் மூலம் வழியோர கிராமங்களான சாத்தமங்களம், கீழப்பழுவூர், வாரணவாசி, தவுத்தாய்குளம் மற்றும் அம்மாகுளம் ஆகிய பகுதிகளுக்கு தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் வழங்கப்படும் குடிநீரின் அளவு அதிகமாக பெறப்படுவதாக தெரிய வருகிறது. இதனால் இந்நகராட்சிக்கு பெறப்படும் குடிநீர் குறைவாக பெறப்படுகிறது. எனவே, மேற்கண்ட அம்மாகுளம், சாத்தமங்களம் மற்றும் கீழப்பளுவூர் பகுதிகளில் குடிநீரின் அளவை கணக்கீடு செய்யும் வகையில் குடிநீர் அளவீடுமானி பொருத்துவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,00,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மேற்காணும் பணியினை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>2. மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 123 | <u>பொருள் எண். 29</u><br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்திரவு கடிதம் ந.க.எண்.31441/2016/WS3, நாள்.28.11.2016ன்படி, டான்செம் வளர்ச்சி திட்டத்தின் கீழ் வாசன் ஏரி மற்றும் கொம்புகுழிக்குட்டை போன்ற நீர் நிலைகளில் மரம் நடுதல், கசிவு நீர்க்குட்டை மற்றும் மழைநீர் கட்டமைப்பு பணிகள் நாகம்மாள் சாவடி ஏரி நீர்நிலையினை மேம்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ள ரூ.16.74 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, உரிய நடைமுறைகளின் படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, 28.07.2017 அன்று திரு.வெ.ஹரிகிருஷ்ணன், என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது.<br>ஆனால், 3 வருடங்கள் கடந்தும், ஒப்பந்ததாரர் பணியினை விரைந்து முடிக்காமல் காலதாமதம் செய்து வரும் செயலானது, ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறிய செயலாகும். ஒப்பந்ததாரரிடம் பலமுறை வேலையை ஆரம்பிக்க கோரி தெரிவித்த போதும் திட்டப்பணிகளை நிறைவேற்றாமல் மொத்தன போக்குடன் செயல்படுவதால், திட்டப்பணிகள் நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதால், ஒப்பந்ததாரரின் வேலை | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | உத்திரவு ரத்து செய்யப்படுகிறது என்றும், அதற்கான இழப்பீட்டு தொகை ஒப்பந்ததாரர் வைப்புத்தொகையிலிருந்து ஈடு செய்யப்படும் என்று 08.07.2021ம் தேதி ரத்து அறிவிப்பு வழங்கப்பட்டும் நாளது தேதி வரை எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை. எனவே, திரு.வெ.ஹரிகிருஷ்ணன், அரியலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்திடவும், அதற்கான இழப்பீடு தொகையினை திரு.வெ.ஹரிகிருஷ்ணன், அரியலூர் அவர்களின் வைப்புத்தொகையிலிருந்து ஈடு செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| 16.07.2021 | 124 | <u>பொருள் எண். 30</u><br>அரியலூர் நகராட்சிக்கு திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் விநியோகம் செய்யப்படும் குடிநீரான சாத்தமங்களம், கீழப்பழுவூர், வாரணவாசி, தவுத்தாய்குளம் மற்றும் அம்மாகுளம் ஆகிய வழியோர கிராமங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவற்றுள், சாத்தமங்களம், கீழப்பழுவூர் மற்றும் அம்மாகுளம் ஆகிய வழியோர கிராமங்களில் வழங்கப்படும் குடிநீரின் அளவை கணக்கிடுவதற்கு கட்டுப்பாட்டு மீட்டர் (electromagnetic water meter) பொருத்தும் பணிகள் 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும், குடிநீர் விநியோகப்பணி என்பதாலும் பணியினை உடன் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 125 | <u>பொருள் எண். 31</u><br>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்தில் பழைய மற்றும் புதிய கூட்டு குடிநீர் திட்டத்தில் செயல்படும் 50HP மின்மோட்டார் அடிக்கடி பழுது ஏற்படுவதாலும், அதனை சரி செய்யும் நேரங்களில் குடிநீர் விநியோகம் செய்வதில் தொய்வு ஏற்படுவதை சரி செய்திட புதிய 50HP மின் மோட்டாரினை 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்திட ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும், குடிநீர் விநியோகப்பணி என்பதாலும் பணியினை உடன் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 126 | <u>பொருள் எண். 32</u><br>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்தில் பழைய மற்றும் புதிய கூட்டு குடிநீர் திட்டத்தில் செயல்படும் 7.50HP, 10HP & 15HP மின்மோட்டார் அடிக்கடி பழுது ஏற்படுவதாலும், அதனை சரி செய்யும் நேரங்களில் குடிநீர் விநியோகம் செய்வதில் தொய்வு ஏற்படுவதை சரி செய்திட புதிய 7.50HP, 10HP & 15HP மின் மோட்டாரினை 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்திட ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும், குடிநீர் விநியோகப்பணி என்பதாலும் பணியினை உடன் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 127 | <u>பொருள் எண். 33</u><br>அரியலூர் நகராட்சி பழைய அலுவலக வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியின் சுற்றுச்சுவர் இடிந்து விட்டதால், புதிய சுற்றுச்சுவர் மற்றும் Paver Block பதிக்கும் பணிகள் 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள திட்டமதிப்பீடு ரூ.4.99 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும், குடிநீர் விநியோகப்பணி என்பதாலும் பணியினை உடன் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 128 | <u>பொருள் எண். 34</u><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அரசு கலை மற்றும் கல்லூரி வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி சுற்றிலும் Paver Block பதித்தல், இரும்பு படிகட்டு (MS staircase) அமைத்தல் மற்றும் குரும்பன்சாவடி பராமரிப்பு பணிகள் 15வது நிதிக்குழு திட்டத்தின் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள திட்டமதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு</u><br>பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும், குடிநீர் விநியோகப்பணி என்பதாலும் பணியினை உடன் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 16.07.2021 | 129 | <u>பொருள் எண். 35</u><br>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்.05ஐ நடத்தி வரும் திரு.கோவிந்தராஜ் என்பவர் பெயரில் உள்ளது. குத்தகைதாரர் கடந்த 03.02.2020 அன்று இறந்துவிட்டதால், அன்னாரது வாரிசுதாரரும், மகனுமான திரு.கோ.பெரியசாமி என்பவர் குத்தகை உரிமையினை அன்னாரது பெயர் மாற்றம் செய்து தரக்கோரி விண்ணப்பித்துள்ளார். காலம் சென்ற திரு.கோவிந்தராஜ் குத்தகைதாரர் இதர வாரிசுதாரர்கள் குத்தகை உரிமத்தினை பெயர் மாற்றம் செய்து தர சம்மதம் கடிதம் தெரிவித்துள்ளனர். எனவே, அரசாணை(நிலை) எண்.92, நாள்.03.07.2007ன்படி பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>திரு.பெரியசாமி என்பவர் குத்தகை உரிமத்தினை நடைமுறையின்படி, குத்தகை அரசாணைகளின்படி, நிபந்தனைகளுக்கு உட்பட்டு பெயர் மாற்றம் செய்யலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 130 | <u>பொருள் எண். 36</u><br>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்.34 மற்றும் 41ஐ நடத்தி வரும் திரு.துரைகண்ணு என்பவர் பெயரில் உள்ளது. குத்தகைதாரர் கடந்த 09.08.2014 அன்று இறந்துவிட்டதால், அன்னாரது வாரிசுதாரரும், மகனுமான திரு.து.மணிகண்டன் என்பவர் குத்தகை உரிமையினை அன்னாரது பெயர் மாற்றம் செய்து தரக்கோரி விண்ணப்பித்துள்ளார். காலம் சென்ற திரு.துரைகண்ணு குத்தகைதாரர் இதர வாரிசுதாரர்கள் குத்தகை உரிமத்தினை பெயர் மாற்றம் செய்து தர சம்மதம் கடிதம் தெரிவித்துள்ளனர். எனவே, அரசாணை(நிலை) எண்.92, நாள்.03.07.2007ன்படி திரு.து.மணிகண்டன் பெயருக்கு மேற்படி கடையினை பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 131 | <u>பொருள் எண். 37</u><br>அரசாணை (4D) எண்.2 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.02.02021ன்படி, அம்மா உணவக சுய உதவிகுழு பணியாளர்களுக்கு தினசரி கூலி ரூ.250/-லிருந்து ரூ.325/- என உயர்த்தி வழங்கி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் பதிவு செய்யலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 132 | <u>பொருள் எண். 37</u><br>COVID - 19 இரண்டவது அலையின் காரணமாக கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வருவதால் பொது மக்கள் நலன் கருதி அனைத்து பகுதியிலும் கபசூரக்குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக கபசூரக்குடிநீர் சூரணம் கொள்முதல் செய்ய 1920 ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் விதி 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகையினை ரூ.3,30,750/-னை M/s.Herbosiddh Lifecare Pvt.ltd (GMP Company No.1414), Dindigul-624005 என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலக குறிப்பு</u><br>கொரோனா நோய் முன்னெச்சரிக்கை பணி என்பதாலும் பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் நகராட்சி விதி15ன் கீழ் பணிகளின் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.3,30,750/- வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 16.07.2021 | 133 | நவீன எரிவாயு தகன மேடையில் இறந்தவர்களின் உடல்கள் மரக்கட்டைகள் கொண்டு எரிக்கப்பட்டு வந்த நிலையில், கொரோனா காலத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் நவீன எரிவாயு தகன மேடையில் இறந்தவர்களின் உடல்களை எரிப்பதற்கு காலதாமதம் ஆனதால், மரக்கட்டைக்கு மாற்றாக சிலிண்டர் (Gas) கொண்டு எரிப்பதற்கான கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr><td>16.07.2021</td><td>134</td><td>நவீன எரிவாயு தகன மேடையில் மரக்கட்டைக்கு மாற்றாக சிலிண்டர் (Gas) கொண்டு எரிப்பதற்கான கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள 14.07.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>M/s.M.H.T Engineering, Chennai</td><td>1.82% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/s.Yes Yes Jee Engineering, Chennai</td><td>0.70% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
</table>
மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்த M/s.M.H.T Engineering, Chennai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>16.07.2021</td><td>135</td><td>மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்களின் அறிவுரையின்படி, நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக காய்ச்சல் கண்டறிந்தவர்கள், கொரோனா அறிகுறி உள்ளவர்கள், தடுப்பூசி போடாதவர்களை பற்றிய விபரம் சேகரித்தல், காய்ச்சல் மற்றும் அறிகுறிகள் கண்டறிந்தவர்களை முகாம்களுக்கு அனுப்பி வைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள 100 வீடுகளுக்கு ஒரு நபர் என கணக்கெடுப்பாளர்களை நியமித்து பணி மேற்கொள்ளவும், இப்பணியினை கவிக்குயில் பெண்கள் சுயஉதவிக்குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>16.07.2021</td><td>136</td><td>அரசாணை நிலை எண்.88 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.24.02.2021ன் படி கொரோனா வைரஸ் தொற்று பரவி வருவதை தடுப்பதற்கு அனைத்து துறைகள் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை பணிகளில் கொரோனா நோய்தொற்றின் காரணமாக இறந்தவர்களின் உடல்களை அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகன மேடையில் அடக்கம் செய்ய அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் தற்காலிய காத்திருப்போர் கூடம் அமைக்க 1920 ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் விதி 15 மற்றும் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி விதி16(A)ம் படியும் மேற்கொள்ளப்பட்டு அதற்கான பட்டியல் தொகையினை ரூ.3,36,000/- னை திரு.A.சுதாகர், அரியலூர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
கொரோனா நோய் முன்னெச்சரிக்கை பணி என்பதாலும் பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் நகராட்சி விதி15ன் கீழ் பணிகளின் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.3,36,000/- வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>